நகர மன்றம் அல்ல. அரசாங்கம்தான் இதை எடுத்துக் கொண்டு நிரந்தரமான ஒரு வழி காண்பதற்காக இதைச் செய்யலாம் என்று எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இது உடனடியாக நிறைவேற்றப்படக்கூடியதல்ல. இதில் பரிசிலனை செய்யவேண்டும், நிதி வேண்டும். இதில் எல்லாம் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. கோதாவரி, கிருஷ்ணா தண்ணீரிலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்தை மத்திய சர்க்கார் தெரிவித்தார்கள். இது சுலபமாக இருக்கும், சிக்கனமாக இருக்கும். அதுவும் பரிசீலனை செய்யப் பட்டு வந்தது. இதெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. சென்னை நகருக்கு குடிதண்ணீர் கட்டுப்பாடு இல்லாமல் நிரந்தரமாக கிடைக்கவேண்டும் என்பதில் அரசாங்கத்திற்குப் பரிபூர்ண அக்கறையுண்டு, ஆனால் திருப்பித் திருப்பி தி.மு.க.-வைச் சேர்ந்த எதிர்க்கட்சி கனம் உறுப்பினர்கள், இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கவில்லை, நகரமன்றம்தான் கவனிக்கிறது என்று சொல்வது ஏதோ ஒன்றை மனத்தில் வைத்துச் சொல்கிறார்களேதவிர வேறு அல்ல. சென்னை நகரின் குடி தண்ணீர்த் தேவையைப் பற்றி அரசாங்கத்திற்குப் பரிபூர்ண அக்கறை உண்டு. எதில் என்னென்ன கவனம் செலுத்த வேண்டுமோ, நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அவைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டுதான் வருகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்ததற்காக மிகவும் நன்றி. ஆனால் இரண்டு மூன்று வருடங் களுக்கு முன்பு (வொர்ல்ட்) உலக பாங்கிலிருந்து எக்ஸ்பெர்ட்சள் வந்து பார்வையிட்டு, இதற்காக ஒரு திட்டம் போட்டு, அதற்கு 18 லட்சம் ரூபாய் ஆகும் என்றும், அந்தத் தொகையை அவர்கள் நீண்ட காலத்தவணைக் கடனாகத் தருவதாகவும், ஆனால் அதற்கு சென்னை அரசாங்கம் உத்தரவாதம் தரவேண்டும் என்றும் சொல்லி யிருக்கிறார்கள். அதற்கு சென்னை அரசாங்கம் ஒத்துக்கொள்ள வில்லை என்று தெரிகிறது. அப்படி ஒத்துக்கொள்ளாததற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது தவறு. வொர்ல்ட் பாங்கிலிருந்து எக்ஸ்பெர்ட்கள் வந்து அப்படி ஒன்றும் சொல்லவில்லை. அரசாங்கம் அதற்குக் குறுக்கே நிற்பதாகச் சொல்வதும் தவறு.

வேலூர்-கிருஷ்ணகிரி சாலை

* 230 கேள்வி—திரு. ர. ஜீவரத்னம் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூரிலிருந்து கிருஷ்ணகிரிக்குப் போகும் பாதையை அகலப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனை யிலுள்ளதா?

(இ) ஆமெனில், அவ்வேலை எப்போது மேற்கொள்ளப்படும்?

10th March 1966]

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The Vellore–Krishnagiri Road forms part of the Ranipet-Krishnagiri road (National Highway 46) from mile 86/4 to 159/5. The work of widening the black top surface from 86/4 to 87/2 to 22 feet width is in progress. The stretch from mile 87/2 to 124/6 has already been widened to 22 feet width. Proposals for widening the remaining stretch from miles 124/6 to 159/5 have been included in the Fourth Five-Year Plan for National Highways and the approval of the Government of India is awaited.

MR. SPEAKER : I have received information that the Hon. Minister for Health is not doing well. So, I am passing over questions with Nos. 231, 232 and 233.

மகிழம்பாடி பஞ்சாயத்து

* 234 கேள்வி—**திரு. து. ப. அழகமுத்து** : கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) லால்குடி பஞ்சாயத்து யூனியனிலுள்ள மகிழம்பாடி பஞ்சாயத்தில் அரிசன தெருவுக்குக் குடி தண்ணீர் வழங்குவதற்கு பைப் லைன் போட சர்க்காரால் தற்காலிக தடை விதிக்கப்பட்டு இருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) செயற்குறிப்பிலுள்ள இவ்வேலையை நிறைவேற்றுவதை ஆதரித்தும் எதிர்த்தும் முறையீடுகள் வந்துள்ளன. எனவே, எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து முழு விசாரணை செய்த பின்னரே இது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இங்கு ஹரிஜனங் களுக்கும் குடிதண்ணீர் வழங்குவதற்காக செய்யப்பட்ட முயற்சி களுக்கு கலெக்டர் அவர்கள் ஸ்டே கொடுத்து இருந்ததை பின்னால் பரிசீலனை செய்து கலெக்டரே வெக்கேட் செய்து இருக்கிறார்கள். அதன் பிறகு மறுபடியும் சர்க்கார் ஸ்டே கொடுத்திருக்கிறார்கள். இன்னும் காலதாமதம் செய்யாமல் ஸ்டே-யை வெக்கேட் செய்வதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்த அபிப்பிராயத்திற்கு மாறு பட்டவர்கள், பஞ்சாயத்தில் இருக்கின்ற இப்போதுள்ள தலைவர் அவர்கள், பழைய முன்னாள் தலைவர், இவர்கள் எதிர்ப்பதும் ஆதரிப் பதுமான கருத்துக்களைக் கூறி சர்க்காரிடம் மனுக்கள் கொடுக் கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களும் மனு கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது சர்க்காரால் ஸ்டே கொடுக்கப்படு கிறது. அந்த முறையில்தான் இப்போது ஸ்டே கொடுக்கப்பட்டி ருக்கிறது. இதைப்பற்றி மேலும் ரிப்போர்ட் கலெக்டரிடம் கேட்கப் பட்டிருக்கிறது. அங்கு சுமுகமாகவும், நேர்மையாகவும் இருக்கின்ற வழியில் ஒரு முடிவு எடுக்கின்ற வகையில் ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது. கலெக்டர் அவர்களின் ரிப்போர்ட் கிடைத்ததும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.